22.11.2016

தினமணி

**விளாத்திகுளம், எட்டயபுரம் பகுதிகளில் பாசிப்பயறு, உளுந்து விளைச்சல் பாதிப்பு: விவசாயிகள் கவலை**

கோவில்பட்டி வருவாய் கோட்டத்தில் நிகழாண்டு பருவத்துக்கு ஏற்ற மழைப்பொழிவு இல்லாததால் பாசி , உளுந்து மானாவாரி பயிர்களில் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

நிகழாண்டு, புரட்டாசி இரண்டாவது வாரத்தில் உளுந்து , பாசிப்பயறு ஆகியவற்றை வறண்ட நிலத்தில் விதைத்து மழையை எதிர்நோக்கி காத்திருந்தனர்.

இத்தகைய சூழலில் ஐப்பசி மாதத்தில் கோவில்பட்டி கோட்டத்தில் விளாத்திகுளம், எட்டயபுரம், ஓட்டப்பிடாரம் வட்டங்களில் சில பகுதிகளில் ஓரளவு நல்ல மழை பெய்தது. சில பகுதிகளில் மழையளவு சற்று குறைவாக இருந்தது. இருப்பினும் சில தினங்கள் பெய்த மழையால் நீர்நிலைகள் அனைத்தும் நிரம்பியதோடு பயிர்களும் செழிப்பாக இருந்தன. ஆனால் அதன்பிறகு மழை இல்லாததால் பயிர்கள் பாதிப்படைந்தது.

புரட்டாசி இரண்டாவது வாரத்தில் பயிரிடப்பட்ட பாசிப்பயறு , உளுந்து உள்ளிட்ட பயறுகளின் முதிர்வு காலம் தற்போது எட்டியுள்ள நிலையில் , போதிய மழையின்மை காரணமாக செடிகளில் காய் பிடிக்காமல் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

வெம்பூர், கரிசல்குளம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் தற்போது பாசிப்பயறு அறுவடை தொடங்கி உள்ளது. இதில் பாசி , உளுந்து பயிர்களில் மகசூல் எதிர்பார்த்த அளவு இல்லாததால் விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து கரிசல்குளத்தைச் சேர்ந்த விவசாயி முத்துவேல் கூறியது: கடந்த 15 நாள்களாக மழையின்றி வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதால் பயிரில் காய் பிடிக்காமல் போய் விட்டது. காய் பிடித்த பயிர்களில் பூஞ்சாண் நோய் பாதிப்பு காரணமாக விளைச்சல் இல்லாமல் போனது.

ஏக்கருக்கு 6 முதல் 8 குவிண்டால் வரை மகசூல் கிடைக்க வேண்டிய நிலையில் ஒரு குவிண்டால் பாசிப்பயறு மட்டுமே கிடைக்கும் நிலை உள்ளது. பாசி, உளுந்து வகைகளுக்கு சந்தையில் நல்ல விலை இருந்தும் விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளோம். நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதுகுறித்து மதிமுக விவசாய அணி மாநில துணைச் செயலர் வரதராஜன் கூறியது: தொடக்கத்தில் எதிர்பார்த்த அளவுக்கு மழை இல்லாததால் விளைச்சல் இல்லை. குறிப்பாக , கடந்த 15 நாள்களாக வானம் மேகமூட்டத்துடன் மழைபெய்யாமல் போக்கு காட்டியதால் பாசிப்பயறு போதிய விளைச்சல் இன்றி திரட்சியின்றி மகசூல் பாதியாக குறைந்துள்ளது.

இனிமேல் மழை பெய்தாலும் போதிய விளைச்சல் கிடைப்பது சந்தேகமே. எனவே பயிர் சாகுபடி கணக்கெடுப்பு மற்றும் பயிர் விளைச்சல் பாதிப்பு கணக்குகளை முறையாக எடுத்து ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்றார் அவர்.

தினகரன்

**பார்வையை தெளிவுபடுத்தும் பொன்னாங்கண்ணி**



எளிதில், அருகில் கிடைக்க கூடிய மூலிகைகள் , சமையலறையில் உள்ள உணவுப் பொருட்களை கொண்டு பக்கவிளைவில்லாத எளிய மருத்துவத்தை பார்த்து வருகிறோம். அந்தவகையில் , பொன்னாங்கண்ணி கீரையின் மருத்துவ குணங்களை காணலாம். பல்வேறு நன்மைகளை உடைய இதில் , நாட்டு பொன்னாங்கண்ணி , சீமை பொன்னாங்கண்ணி , சிவப்பு பொன்னாங்கண்ணி என 3 வகைகள் உள்ளன.

பொன்னாங்கண்ணி கீரை உள் உறுப்புகளை பலப்படுத்த கூடியது. நோய் வராமல் தடுக்கும் தன்மை உடையது. புற்றுநோயை உண்டாக்கும் நச்சுக்களை வெளித்தள்ளுகிறது. கொழுப்பு சத்தை குறைக்க கூடியதாக விளங்குகிறது.

நாட்டு பொன்னாங்கண்ணியை பயன்படுத்தி கண்பார்வையை தெளிவுபடுத்தும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: பொன்னாங்கண்ணி, பனங்கற்கண்டு, பால்.

பொன்னாங்கண்ணியை நன்றாக அரைத்து 20 மில்லி அளவுக்கு சாறு எடுக்கவும். இதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்கவும். பின்னர், காய்ச்சிய பால் சேர்த்து வடிகட்டி குடித்துவர மஞ்சள் காமாலை மறைந்து போகும். உடலுக்கு குளிர்ச்சி ஏற்படும். கண் நரம்பு , தசைகளை பலப்படுத்தும். பார்வையை கூர்மையாக்கும்.பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட பொன்னாங்கண்ணி அற்புதமான கண் மருந்தாகி பலன் தருகிறது.

ஈரலுக்கு பலம் தருவதாக அமைகிறது. புரதச்சத்து நிறைந்தது. ரத்த சோகையை போக்க கூடியது. சர்க்கரை நோயை தணிக்கிறது. வைட்டமின் ‘ஏ’ குறைப்பாட்டை சரிசெய்கிறது. பொன்னாங்கண்ணி கீரையை கொண்டு உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடிய தைலம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: நல்லெண்ணெய் , பொன்னாங்கண்ணி கீரை. ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் விடவும்.

இதனுடன் பொன்னாங்கண்ணி கீரை பசையை சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். வடிகட்டி வாரம் ஒருமுறை தலைக்கு தேய்த்து குளித்துவர கண்கள் குளிர்ச்சி பெறும். கண்களில் ஏற்படும் சிவப்பு தன்மை மாறும். உடல் குளிர்ச்சி பெறும். அன்றாடம் உண்ண கூடிய கீரைகளில் பொன்னாங்கண்ணியும் ஒன்று. உடலை பளபளப்பாக்கும். குளிர்ச்சி உடைய இது மிகுந்த சத்துக்களை உள்ளடக்கியது. ரத்த சோகையை போக்கும்.

பொன்னாங்கண்ணியை பயன்படுத்தி தோலுக்கு பொலிவு தரும் மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: பச்சை பயறு , கஸ்தூரி மஞ்சள் , பொன்னாங்கண்ணி கீரை , பால். ஒரு பாத்திரத்தில் பச்சை பயறு மாவு எடுக்கவும். சிறிது கஸ்தூரி மஞ்சள் சேர்க்கவும். இதனுடன் பொன்னாங்கண்ணி கீரை சாறு , பால் சேர்க்கவும். இதை நன்றாக கலந்து முகப்பூச்சாக பயன்படுத்தலாம். தோல் வறட்சியாக இருக்கும் இடத்தில் பூசினால் வறட்சி நீங்கி தோல் பொலிவு பெறும். தோல்களில் உள்ள சுருக்கம் சரியாகும்.

பொன்னாங்கண்ணி கீரையை அடிக்கடி சாப்பிடுவதால் உடல் பொலிவு பெறும். கண் பிரச்னைகள் விலகி போகும். இதை பயன்படுத்துவது என்பது ஆரோக்கியத்துக்கு வழிவகுக்கும். மழைக்காலங்களில் நகத்தில் ஏற்படும் தொற்று, வலிக்கான மேல் பூச்சு மருந்து தயாரிக்கலாம். அவரை இலையை அரைத்து சிறிது மஞ்சள் , சுண்ணாம்பு சேர்த்து கலந்து நகத்தில் பற்றாக பூசிவர நகத்தில் ஏற்படும் சொத்தை சரியாகும். நகங்கள் ஆரோக்கியம் பெறும்.

**மலச்சிக்கலை போக்கும் கொய்யா**




எளிதில் கிடைக்க கூடிய மூலிகைகள் , இல்லத்தில் உள்ள உணவுப் பொருட்களை கொண்டு பாதுகாப்பான பக்கவிளைவில்லாத மருத்துவம் குறித்து பார்த்து வருகிறோம். அந்தவகையில் , கொய்யாவின் நன்மைகள் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் காணலாம். கொய்யா பழம் பல்வேறு சத்துக்களை கொண்டது. இதில் , வைட்டமின் சி அதிகம் உள்ளது. மலச்சிக்கலை போக்குகிறது. கொய்யா இலைகள் தோல்நோய்களை சரிசெய்கிறது. காய்ச்சலை தணிக்கும் தன்மை உடையது.

கொய்யா மரத்தின் காய் , பழம், இலை என அனைத்து பாகங்களும் மருந்தாகிறது. கொய்யா இலைகளை பயன்படுத்தி காய்ச்சலுக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கொய்யா இலைகள் , பனங்கற்கண்டு. கொய்யா இலைகள் 10 எடுக்கவும். இதை நன்றாக சுத்தப்படுத்தி துண்டுகளாக்கி போடவும். இதனுடன் ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு, பனங்கற்கண்டு சேர்த்து கொதிக்க வைக்கவும்.

இதை வடிகட்டி தினமும் 3 வேளை குடித்துவர சிக்குன் குனியா , டெங்கு என அச்சுறுத்தும் காய்ச்சல் சரியாகும். காய்ச்சல் காரணமாக ரத்த வட்ட அணுக்கள் குறைபாடு ஏற்படும். இதை குறையாத வண்ணம் பார்த்துக்கொள்ளும். இந்த தேனீரை குடித்துவர கிருமிகள் விலகிப்போகும். பல்வேறு நன்மைகளை கொண்ட கொய்யா இலைகள் பூஞ்சை காளான்கள் , நோய் கிருமிகளை போக்கவல்லது. நோய்களை குணப்படுத்த கூடியது.

கொய்யா இலைகளை பயன்படுத்தி ஆறாத புண்களை குணப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கொய்யா இலைகள் , தேங்காய் எண்ணெய். ஒரு பாத்திரத்தில் சிறிது தேங்காய் எண்ணெய் எடுக்கவும். இதனுடன் நீர்விடாமல் அரைத்து வைத்திருக்கும் கொய்யா இலைகளை சேர்த்து காய்ச்சவும். இந்த தைலத்தை ஆறவைத்து வடிகட்டி போட்டுவர ஆறாத புண்கள் ஆறும்.

மேல்பூச்சாக போடும்போது சேற்றுப்புண் , விரல் இடுக்குகளில் ஏற்படும் வலி, எரிச்சல் போன்றவை குணமாகும். தலைக்கு தேய்த்து குளிப்பதன் மூலம் பொடுகு இல்லாமல் போகும். தோலில் ஏற்படும் அரிப்பு , தடிப்பு, படை போன்றவற்றுக்கு மேல்பூச்சாக பயன்படுத்தலாம். கொய்யா இலைகள் வீக்கத்தை வற்ற செய்யும். வலியை குறைக்கும். கொய்யா இலைகளை தண்ணீரில் கொதிக்க வைத்து வாய் கொப்பளித்தால் பல் வலி குறையும்.

இதேபோல், கொய்யா இலைகளை மென்று சாறை மட்டும் விழுங்கினால் பல் வலி குறையும். பல் சொத்தை சரியாகும். ஈறுகளில் ரத்தம் கசிவது நிற்கும். பற்கள் பலம் பெறும்.பச்சை நிறமுள்ள கொய்யா பழத்தை சிறு சிறு துண்டுகளாக்கி நீர்விட்டு இரவு முழுவதும் ஊறவைக்கவும். காலையில் தண்ணீரை வடிக்கட்டி குடித்துவர ரத்தத்தில் உள்ள சர்க்கரை கட்டுப்படும். மலச்சிக்கலுக்கு மருந்தாக விளங்குகிறது. கொய்யாவில் நார்ச்சத்து அதிகம் உள்ளது.

கர்ப்பிணிகள் சாப்பிடுவது நல்லது. கொய்யா அதிக சத்துக்களை உள்ளடக்கியது. நோய் எதிர்ப்பு சக்தி உடையது. புற்றுநோய் வராமல் தடுக்கிறது. தோல் நோய்களை குணமாக்குகிறது. ஈறுகளில் ஏற்படும் ரத்த கசிவு, வீக்கத்துக்கான மருத்துவத்தை பார்க்கலாம். இப்பிரச்னைக்கு செவ்வாழை மருந்தாகிறது. செவ்வாழையை மென்று சாப்பிடுவதால் பற்கள் பலம் பெறும். ஈறுகளில் ஏற்படும் ரத்த கசிவு சரியாகும்.

**கல்லீரலை பலப்படுத்தும் கரிசலாங்கண்ணி**




எளிதில் கிடைக்க கூடிய மூலிகைகள் , வீடுகளில் உள்ள உணவுப் பொருட்களில் இருந்து பாதுகாப்பான பக்கவிளைவில்லாத மருத்துவத்தை பார்த்து வருகிறோம். அந்தவகையில் , கல்லீரலை பலப்படுத்த கூடியதும் , தலைமுடியை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுவதும் , வீக்கத்தை கரைக்க கூடியதும் , வலியை போக்கவல்லதுமான கரிசலாங்கண்ணியின் நன்மைகள் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் காணலாம்.

கரிசலாங்கண்ணி பல்வேறு நன்மைகளை கொண்டது. வெள்ளை நிற பூக்களை உடைய கரிசலாங்கண்ணி எளிதில் கிடைக்க கூடியது. உப்பு சத்து உடையது. ஈரல் நோய்க்கு மருந்தாகிறது. தலைமுடி உதிர்தலை கட்டுப்படுத்துகிறது. உடலுக்கு குளிர்ச்சி, பலம் கொடுக்கிறது. வெள்ளை கரிசலாங்கண்ணியை பயன்படுத்தி முடி ஆரோக்கியத்துக்கான மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: நல்லெண்ணெய் , கரிசலாங்கண்ணி, அதிமதுரப்பொடி, நெல்லிவற்றல் பொடி. செய்முறை: பாத்திரத்தில் சிறிது நல்லெண்ணெய் ஊற்றவும். இதில் , அரைத்து வைத்திருக்கும் கரிசலாங்கண்ணி இலை விழுது, அதிமதுரப் பொடி, நெல்லிவற்றல் பொடி சேர்த்து நன்றாக கலந்து தைலமாக காய்ச்சவும். இதை வடிகட்டி தலை குளித்து வந்தால் முடி நன்றாக வளரும். தலைமுடி கருமையாகும். ஒரு ஸ்பூன் அளவுக்கு சாப்பிடுவதால் ஈரல் பலப்படும். மஞ்சள் காமாலையை போக்கும். கண்களின் எரிச்சலை தணித்து பார்வையை கூர்மைப்படுத்தும்.

கரிசலாங்கண்ணி வேரை பயன்படுத்தி கல்லீரல் , மண்ணீரலில் ஏற்படும் பிரச்னைக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கரிசலாங்கண்ணி வேர் , அதிமதுரப்பொடி, பனங்கற்கண்டு, சீரகம். செய்முறை: கரிசலாங்கண்ணி வேரை சுத்தப்படுத்தி எடுக்கவும். இதனுடன் அரை ஸ்பூன் அதிமதுரப் பொடி , சிறிது பனங்கற்கண்டு , சீரகம் சேர்த்து ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும்.

இதை வடிகட்டி அன்றாடம் குடித்துவர கல்லீரல் வீக்கம் , மண்ணீரல் வீக்கம் வற்றிப்போகும். கரிசலாங்கண்ணி ஈரலை பாதுகாத்து , அதற்கு பலம் தர கூடியது. பித்தத்தை குறைக்கும் தன்மை கொண்டது. கரிசலாங்கண்ணியை பயன்படுத்தி இருமலை போக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள் கரிசலாங்கண்ணி , தேன். செய்முறை: கரிசலாங்கண்ணி இலை சாறு அரை ஸ்பூன் எடுக்கவும். இதனுடன் ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து கலந்து சாப்பிட்டால் இருமல் சரியாகும். தொண்டையில் ஏற்படும் வலி , எரிச்சல் குணமாகும்.

கைக்குழந்தைகளுக்கு 2 சொட்டு கரிசலாங்கண்ணி சாறு , 10 சொட்டு தேன் கலந்து கொடுக்கலாம். 10 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு கால் ஸ்பூன் கரிசலாங்கண்ணி சாறு , ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து கலந்து கொடுக்கலாம். கரிசலாங்கண்ணி சாற்றை பூசுவதால் வீக்கம் வற்றிபோகும். நெறிகட்டு சரியாகும். யானைக்கால் நோயால் ஏற்படும் வீக்கம் வற்றிப்போகும்.
பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட கரிசலாங்கண்ணி இருமலை போக்கும் மருந்தாக விளங்குகிறது.

நெஞ்சக சளியை கரைத்து வெளித்தள்ளுகிறது. கரிசலாங்கண்ணி தலைமுடி அடர்த்தியாக வளரவும் , முடிகொட்டாமல் இருப்பதற்கும் , இளநரைக்கு மருந்தாகவும் விளங்குகிறது. சிறார்களுக்கு சிறுநீர் கழிக்கும்போது ஏற்படும் எரிச்சலை போக்கும் மருத்துவத்தை பார்க்கலாம். கற்கண்டு அல்லது பணங்கற்கண்டு அல்லது வெல்லத்தை நீரில் கரைத்து ஓரிருமுறை கொடுப்பதால் சிறுநீர் எரிச்சல் அடங்கிப்போகும்.